முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 65 - இரண்டாம் மொழி - தமிழ்

## புள்ளியிடும் திட்டம்



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 65 - இரண்டாம் மொழி - தமிழ்

வினாப்பத்திரம் I - 1 x 40 = **40 புள்ளிகள்**

**வினாப்பத்திரம் II**

✵ பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் ஒரு வினாவிற்கும் பகுதி III இல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**பகுதி I**

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 01 | - | கட்டுரை | | **20 புள்ளிகள்** |
| வினா 02 | - | படம் பார்த்து எழுதுதல் | | **10 புள்ளிகள்** |

**பகுதி II**

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 03 | - | கிரகித்தல் | **ஏதாவது ஒன்று** | **10 புள்ளிகள்** |
| வினா 04 | - | கிரகித்தல் | | |

**பகுதி III**

| | | | | |
|---|---|---|---|---|
| வினா 05 | - | கடிதம் எழுதுதல் | **ஏதாவது ஒன்று** | **10 புள்ளிகள்** |
| | - | சுவரொட்டி எழுதுதல் | | |
| வினா 06 | - | தமிழில் மொழி பெயர்த்தல் | **ஏதாவது ஒன்று** | **10 புள்ளிகள்** |
| | - | உரையாடல் | | |

**மொத்தம் 60 புள்ளிகள்**

| | | |
|---|---|---|
| **வினாப்பத்திரம் I** | - | **40 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் II** | - | **60 புள்ளிகள்** |
| **மொத்தம்** | - | **100 புள்ளிகள்** |

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................... ✓ 4/5
....................................................................
....................................................................

(ii) .................................................................... ✓ 3/5
....................................................................
....................................................................

(iii) .................................................................... ✓ 3/5
....................................................................
....................................................................

**மொத்தம்** ⟶ 10/15

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**✶ புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ] All Rights Reserved]

**65 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

දෙවන භාෂාව - දෙමළ **I, II**
**இரண்டாம் மொழி - தமிழ் I, II**
Second Language - Tamil **I, II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**
**අමතර කියවීම් කාලය ප්‍රශ්න පත්‍රය කියවා ප්‍රශ්න තෝරා ගැනීමටත් පිළිතුරු ලිවීමේදී ප්‍රමුඛත්වය දෙන ප්‍රශ්න සංවිධානය කර ගැනීමටත් යොදාගන්න.**
**Use additional reading time go through the question paper, select the questions and decide on the questions that you give priority in answering.**

**இரண்டாம் மொழி - தமிழ் I / දෙවන භාෂාව - දෙමළ I / Second Language - Tamil I**

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** **வரையுள்ள** வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**සැලකිය යුතුයි :**
(i) **සියලු ම** ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
(ii) අංක **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) යන පිළිතුරුවලින් **නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ** පිළිතුර තෝරා ගන්න.
(iii) **ඔබට සැපයෙන පිළිතුරු පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන් ඔබ තෝරාගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (×) ලකුණ යොදන්න.**
(iv) එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද සැලකිල්ලෙන් කියවා, ඒවා ද පිළිපදින්න.

**Note :**
(i) Answer **all** questions.
(ii) In each of the questions from **1** to **40,** pick one of the alternatives (1), (2), (3), (4) which is **correct** or the **most appropriate.**
(iii) **Mark a cross (×) on the number corresponding to your choice in the answer sheet.**
(iv) Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்கு **ஒத்தகருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
**1** සිට **5** තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **සමාන පදය** තෝරන්න.
In questions from **1** to **5**, select the **synonyms** for the words in bold print

**1.** எலித்தொல்லை நாளுக்கு **நாள்** அதிகரித்தது.
(1) தினம் (2) நிமிடம் (3) மாதம் (4) வாரம்

**2.** இலங்கையின் நீண்ட **நதி** மகாவலி கங்கையாகும்.
(1) கடல் (2) குளம் (3) கேணி (4) ஆறு

**3.** குமார் **தெரு** ஓரமாக நடந்து சென்றான்.
(1) கரை (2) வீதி (3) தரை (4) காடு



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** யானையின் **காதுகள்** இரண்டும் சுளகுகளைப் போன்று இருந்தன.
(1) கண்கள் (2) கால்கள் (3) செவிகள் (4) நாசிகள்

**5.** ஆசிரியர் மாணவர்களிடம் வினாக்களை **வினவினார்**.
(1) கூறினார் (2) எழுதினார் (3) கேட்டார் (4) விசாரித்தார்

- **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்கு **எதிர்க்கருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
**6** සිට **10** තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **විරුද්ධ පදය** තෝරන්න.
In questions from **6 to 10**, select the **antonyms** for the words in bold print

**6.** **ஒற்றுமை** உயர்வு தரும்.
(1) நன்மை (2) வேற்றுமை (3) நிலைமை (4) கடமை

**7.** இலங்கை **இயற்கை** வளம் மிக்கது.
(1) செயற்கை (2) பொய்கை (3) செழுமை (4) வாழ்க்கை

**8.** நண்பர்கள் இருவரும் **இரகசியம்** பேசினர்.
(1) விமர்சனம் (2) பரகசியம் (3) யோசனை (4) முணுமுணுப்பு

**9.** நல்ல செயல் மூலம் **நன்மை** ஏற்பட்டது.
(1) சிறுமை (2) திறமை (3) தீமை (4) பொறுமை

**10.** இலங்கை தேயிலையை **ஏற்றுமதி** செய்கின்றது.
(1) வருமதி (2) வாங்குதல் (3) வெகுமதி (4) இறக்குமதி

- **11** தொடக்கம் **13** வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள **பேச்சு வழக்குச் சொல்லுக்கு நிகரான எழுத்து வழக்குச் சொல்லைத்** தெரிவுசெய்க.
**11** සිට **13** තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් දැක්වෙන **කථන බසින් ඇති පදයට අදාළ ලිඛිත පදය** තෝරන්න.
In questions from **11** to **13**, select the words in **written form for the words in spoken form** given in bold print

**11.** **இதிலை** முப்பது ரூபாய் உள்ளது.
(1) இதாலை (2) இதில் (3) இதனால் (4) இதால

**12.** குழந்தை **எதுக்கு** அழுகிறது?
(1) யாருக்கு (2) எவற்கு (3) எதக்கு (4) எதற்கு

**13.** சாப்பாட்டிற்குப் பின்னர் மருந்து **குடியுங்க.**
(1) குடீங்க (2) குடிங்கள் (3) குடிக்குங்க (4) குடியுங்கள்

- **14** தொடக்கம் **16** வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள **இடைவெளியை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
**14** සිට **16** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ **හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු** පදය තෝරන්න.
In each question from **14** to **16**, select the **most suitable word to fill in the blank.**

**14.** நான் பால் குடிக்கின்றேன். ........................ தேநீர் குடிக்கின்றீர்கள்.
(1) நீங்கள் (2) அவர்கள் (3) அவன் (4) நீ

**15.** இலங்கையின் தேசிய வனங்களுள் யால வனமும் ஒன்று. ........................ பல பறவை இனங்கள் காணப்படுகின்றன.
(1) அவை (2) அங்கே (3) இவை (4) அது

**16.** எனது வீடு கொழும்பில் இருக்கிறது. ........................ தாத்தாவால் கட்டப்பட்டது.
(1) அது (2) அதில் (3) அதனால் (4) அதற்கு

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- **17** தொடக்கம் **19** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் பொருத்தமான **முடிக்கும் சொல்லைத்** தெரிவுசெய்க.
**17** සිට **19** තෙක් එක් එක් ප්‍රශ්නයට සුදුසු **අවසාන පදය** තෝරන්න.
Each of the questions from **17** to **19**, select the suitable **ending word.**

**17.** நானும் தர்சனும் ________________________
(1) ஓடினான். (2) ஓடினாய். (3) ஓடினோம். (4) ஓடினார்.

**18.** அவன் தங்கையுடன் கோயிலுக்குச் ________________________
(1) சென்றாள். (2) சென்றனர். (3) சென்றான். (4) சென்றார்.

**19.** கண்ணன் தின்னப் பழம் கொண்டு ________________________
(1) தந்தாய். (2) தருவான். (3) தருவாள். (4) தந்தாள்.

- **20** தொடக்கம் **22** வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளிக்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
**20** සිට **22** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ ඇති හිස්තැනට වඩාත් **සුදුසු වචනය** තෝරන්න.
In each question from **20** to **22**, select the **most suitable word** to fill in the blank.

Department of Examinations - Sri Lanka

**20.** அவன் ஒவ்வொரு நாளும் ________________________ சென்றான்.
(1) பாடசாலைக்கு (2) பாடசாலையில் (3) பாடசாலையால் (4) பாடசாலையோடு

**21.** தெரு நாய்களும் நாய்க் குட்டிகளும் ________________________ துரத்தின.
(1) என்னால் (2) என்னை (3) எனக்கு (4) என்னிடம்

**22.** சியாமா ________________________ வந்தாள்.
(1) ரஞ்சனாவின் (2) ரஞ்சனாவுக்கு (3) ரஞ்சனாவை (4) ரஞ்சனாவோடு

- **23** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **பொருத்தமான வினாவைத்** தெரிவுசெய்க.
**23** සිට **25** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට **සුදුසු ප්‍රශ්නය** තෝරන්න.
In each question from **23** to **25**, select the **suitable question** to get the sentence given at the beginning as the answer.

**23.** புகைத்தல் புற்று நோய்க்கு வழிவகுக்கும்.
(1) புகைத்தல் எதற்கு வழிவகுக்கும்?
(2) புகைத்தல் எப்போது வழிவகுக்கும்?
(3) புகைத்தல் எதை வழிவகுக்கும்?
(4) புகைத்தல் எப்படி வழிவகுக்கும்?

**24.** ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் பிறந்தார்.
(1) ஆறுமுகநாவலர் எதனால் பிறந்தார்?
(2) ஆறுமுகநாவலர் எப்போது பிறந்தார்?
(3) ஆறுமுகநாவலர் எதற்காகப் பிறந்தார்?
(4) ஆறுமுகநாவலர் எங்கே பிறந்தார்?

**25.** எனது வீட்டில் மூன்று அறைகள் உண்டு.
(1) உனது வீட்டில் எப்படி அறைகள் உண்டு?
(2) உனது வீட்டில் எங்கே அறைகள் உண்டு?
(3) உனது வீட்டில் எத்தனை அறைகள் உண்டு?
(4) உனது வீட்டில் எவ்வளவு அறைகள் உண்டு?


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

● **26** தொடக்கம் **28** வரையான ஒவ்வொரு வினாவிலும் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவுசெய்க.
**26** සිට **28** තෙක් එක් එක් ප්‍රශ්නයේ හිස්තැන සම්පූර්ණ කිරීමට **වඩාත් සුදුසු පදය** තෝරන්න.
In each question from **26** to **28**, select the **most suitable word** to fill in the blank.

**26.** எனக்கு சரியான பசி ........................ ஏதாவது சாப்பிடத் தாருங்கள்.
(1) எனவே (2) எனினும் (3) என்றால் (4) என்றாலும்

**27.** சாவியை எல்லா இடமும் தேடினேன் ........................ கிடைக்கவில்லை.
(1) ஏனெனில் (2) அதனால் (3) எனவே (4) ஆனாலும்

**28.** இந்தப் புத்தகம் எனக்குத் தேவை ........................ இதில் நல்ல நல்ல கட்டுரைகள் உள்ளன.
(1) ஏனெனில் (2) எனினும் (3) ஆயினும் (4) அதனால்

● **29, 30** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து சரியான விடைகளைத் தெரிவுசெய்க.
**29** සහ **30** ප්‍රශ්නවලට නිවැරදි පිළිතුරු පහත දී ඇති රූප භාවිතයෙන් තෝරන්න.
Select the correct answers for questions **29** and **30** using the pictures given below



அ ஆ இ ஈ

**29.** "பிராணிகளுக்கு உணவு கொடுக்க வேண்டாம்" என்பதைக் காட்டும் படத்தைக் குறிக்கும் எழுத்து
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

**30.** "புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது" என்பதைக் காட்டும் படத்தைக் குறிக்கும் எழுத்து
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

● **31, 32** ஆகிய வினாக்களில் **'அ'** பிரிவில் உள்ள பகுதிக்கு **பொருத்தமான முடிக்கும் சொல் 'ஆ'** பிரிவில் உள்ளது. அவற்றை ஒழுங்கு முறையில் கொண்டமைந்த விடையைத் தெரிவுசெய்க.
**31** හා **32** ප්‍රශ්නවල **'අ'** යටතේ ඇති කොටසට **ගැළපෙන අවසන් පදය** **'ආ'** කොටසේ ඇත. එය නිවැරදි ලෙස ගළපා ඇති වරණය තෝරන්න.
In questions **31** and **32**, **the appropriate ending word** for the phrases in **'அ'** are given in **'ஆ'**. Select the option that matches correctly.

Department of Examinations-Sri Lanka

**31.**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. கோழி | அ. உற்றார் உறவினர்கள் எவரும் இல்லாதவர்கள் |
| 2. அணில் | ஆ. நித்திரை செய்தல் |
| 3. அநாதை | இ. கொக்கரிக்கும். |
| 4. கண்மலர்தல் | ஈ. பிள்ளை |

(1) அ, ஆ, ஈ, இ (2) ஆ, இ, அ, ஈ (3) இ, ஆ, ஈ, அ (4) இ, ஈ, அ, ஆ

**32.**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. இக்கரை மாட்டுக்கு | அ. மண்ணாய்ப் போகும். |
| 2. உண்ணாச் சொத்து | ஆ. மீசைக்கும் ஆசை. |
| 3. காற்றுள்ள போதே | இ. அக்கரைப் பச்சை. |
| 4. கூழுக்கும் ஆசை | ஈ. தூற்றிக்கொள். |

(1) ஆ, அ, இ, ஈ (2) இ, அ, ஆ, ஈ (3) இ, அ, ஈ, ஆ (4) ஈ, அ, ஆ, இ


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- **33** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லிற்குப் பொருத்தமான **தமிழ்ச் சொல்லைத்** தெரிவுசெய்க.
  **33** සිට **35** තෙක් ප්‍රශ්නවල දී ඇති සිංහල වචනයට ගැළපෙන **දෙමළ වචනය** තෝරන්න.
  In questions from **33** to **35**, select the **Tamil word** that matches the Sinhala word.

**33.** විශ්වාසය
(1) உதவி (2) நம்பிக்கை (3) ஒத்துழைப்பு (4) நல்லிணக்கம்

**34.** මාධ්‍යය
(1) மொழி (2) பத்திரிகை (3) ஊடகம் (4) கருத்து

**35.** වැදගත්කම
(1) முக்கியத்துவம் (2) முன்னுதாரணம் (3) முன்னேற்றம் (4) முயற்சி

- **36** தொடக்கம் **37** வரையான வினாக்களில் **இலக்கண வழுவற்ற** வாக்கியத்தை தெரிவுசெய்க.
  **36** හා **37** ප්‍රශ්නවල දී ඇති වරණ අතුරින් **ව්‍යාකරණ නිවැරදිව** යෙදී ඇති වාක්‍යය තෝරන්න.
  In questions **36** and **37**, select the sentence which is **grammatically correct.**

**36.** (1) இலங்கையில் பல்லின மக்கள் வாழ்ந்தன.
(2) இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள்.
(3) இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கின்றன.
(4) இலங்கையில் பல்லின மக்கள் வாழ்ந்தது.

**37.** (1) ஆசிரியர் மாணவர்களுடன் வந்தேன்.
(2) ஆசிரியர் மாணவர்களுடன் வந்தார்கள்.
(3) ஆசிரியர் மாணவர்களுடன் வந்தார்.
(4) ஆசிரியர் மாணவர்களுடன் வந்தன.

- **38** தொடக்கம் **40** வரையான வினாக்களில் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள வாக்கியங்களைக் கருத்துள்ள வகையில் **பொருத்தமாக அமைக்கும் முறையைத்** தெரிவுசெய்க.
  **38** සිට **40** තෙක් ප්‍රශ්නවල දෙන ලද වාක්‍ය **නිවැරදි පිළිවෙළට** ගළපා ඇති වරණය තෝරන්න.
  In questions from **38** to **40**, select the **correct order** of sentences and find the answer given below

**38.** அ - வணக்கம் நீங்கள் யார்?
ஆ - இராணி எப்படி இருக்கிறாய்?
இ - ஹலோ வணக்கம்.
ஈ - நான் இராணி, கொழும்பிலிருந்து கதைக்கிறேன்.
(1) அ, ஆ, ஈ, இ (2) அ, இ, ஈ, ஆ (3) இ, அ, ஈ, ஆ (4) இ, ஈ, அ, ஆ

**39.** அ - முதலில் தலைப்புச் செய்தி
ஆ - செய்திகள் வாசிப்பவர் சுமன் தங்கையா
இ - நேரம் மாலை 6.00 மணி
ஈ - தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு
(1) ஆ, அ, இ, ஈ (2) இ, ஆ, அ, ஈ (3) இ, ஆ, ஈ, அ (4) ஈ, ஆ, இ, அ

**40.** அ - அங்கே இறுதியாக இறைவழிபாடு செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பினோம்.
ஆ - அவர் இந்துக்களின் முக்கிய வழிபாட்டுத் தலங்களில் இதுவும் ஒன்று எனக் கூறினார்.
இ - இவ்வாலயத்தின் வரலாற்றை சமய ஆசிரியர் எமக்கு விளக்கினார்.
ஈ - முதலில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றோம்.
(1) அ, இ, ஈ, ஆ (2) ஆ, அ, ஈ, இ (3) ஈ, அ, இ, ஆ (4) ஈ, இ, ஆ, அ

* *

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **65**
විෂයය / பாடம்: **இரண்டாம் மொழி தமிழ்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 4 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 4 | 34. | 3 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 3 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 1 | 36. | 2 |
| 07. | 1 | 17. | 3 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 1 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 1 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{25}{40}$



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

Department of Examinations-Sri Lanka

## கட்டுரை எழுதுதல்

1. பரீட்சார்த்தி எழுதிய விடயங்கள் பின்வரும் அ, ஆ, இ என்ற மூன்று அம்சத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

   அ. உள்ளடக்கம் பொருத்தம், அளவு
   வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமாக எழுதப்படல், போதியளவு விடயங்கள் இடம்பெறல், சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல். (08 புள்ளிகள்)

   ஆ. கருத்து வெளிப்பாடும், மொழிச் செம்மையும்
   கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்தல், எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கண வழுக்கள் இன்மை (08 புள்ளிகள்)

   இ. எழுதும் நுட்பங்கள்
   பந்திகள் இடம்பெறல், பந்திகளுக்கிடையே தொடர்பு காணப்படல், குறியீடுகள் பொருத்தமாக இடப்படல், உறுப்பமைவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல். (04 புள்ளிகள்)

2. கட்டுரைக்கான மொத்தப் புள்ளிகள்
   அ. 08 புள்ளிகள்
   ஆ. 08 புள்ளிகள்
   இ. 04 புள்ளிகள்
   } **20 புள்ளிகள்**

3. கட்டுரைக்குப் புள்ளி வழங்கும் முறை
   எடுத்துக்காட்டு

$$\frac{04}{08}+\frac{04}{08}+\frac{03}{04}=\frac{11}{20}$$

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## இரண்டாம் மொழி - தமிழ் II

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100** சொற்களில் அமையுமாறு கட்டுரை ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් **එකක්** පිළිබඳ වචන **100** ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay in about **100** words on **one** of the following topics according to the given information.

**அ.** நான் பார்த்த நாடகம்
(i) நாடக அறிமுகம்
(ii) நாடகத்தின் கதை
(iii) நாடகத்தில் வரும் பாத்திரங்கள்
(iv) நாடகத்தின் மூலம் பெற்ற படிப்பினை

**ஆ.** யால தேசிய வனத்தில் ஒருநாள்
(i) அறிமுகம்
(ii) நான் பார்த்தவை
(iii) மனதைக் கவர்ந்தவை
(iv) மறக்கமுடியாத அனுபவம்

**இ.** பயனுள்ள பொழுதுபோக்கு
(i) அறிமுகம்
(ii) பல்வகையான பொழுதுபோக்குகள்
(iii) எனது பொழுதுபோக்கு
(iv) பொழுதுபோக்கால் நான் பெற்ற பயன்கள்

**ஈ.** மரங்களை வளர்ப்போம்
(i) அறிமுகம்
(ii) மரங்களின் பயன்கள்
(iii) மரங்களை அழிப்பதால் ஏற்படும் தீமைகள்
(iv) மரம் வளர்ப்பதில் எமது பங்கு

**உ.** வீட்டுத்தோட்டம்
(i) அறிமுகம்
(ii) பயிரிடப்படும் பயிர்கள்
(iii) வீட்டுத்தோட்டத்தால் ஏற்படும் நன்மைகள்
(iv) வீட்டுத்தோட்டத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் மனத்திருப்தி

Department of Examinations-Sri Lanka

1. **அ. நான் பார்த்த நாடகம்**

i. நாடக அறிமுகம்
- நாடகத்தின் தலைப்பு
- நாடகம் பற்றிய அறிமுகம்
- நாடகத்தின் நோக்கம்

ii. நாடகத்தின் கதை
- மையக்கருத்தைக் குறிப்பிடுதல்
- கதையைச் சுருக்கமாக குறிப்பிடுதல்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. நாடகத்தில் வரும் பாத்திரங்கள்
- நாடகத்தில் இடம்பெறும் பிரதான பாத்திரங்கள், துணைப் பாத்திரங்கள் பற்றிக் குறிப்பிடுதல்

iv. நாடகத்தின் மூலம் பெற்ற படிப்பினை
- நாடகத்தால் பெற்ற விழுமியப் பண்புகள், பயன்கள்
- உண்மையின் உயர்வு
- பெற்றோரைப் பேணுதல்
- கல்வியின் சிறப்பு
- மதுவின் தீமை

**ஆ.யால தேசிய வனத்தில் ஒருநாள்**

i. அறிமுகம்
- தேசிய வனம் என்றால் என்ன? நோக்கம் பற்றி கூறல்.
- யால தேசிய வனத்தின் அமைவிடம்
- சென்றடையும் வழி

ii. நான் பார்த்தவை
- அங்கு காணப்படும் பறவைகள்
- அங்கு காணப்படும் விலங்குகள்
- அவை பராமரிக்கப்படும் முறைகள்
- வனத்தின் வளம்
- அது பாதுகாக்கப்படும் பராமரிக்கப்படும் முறைகள்

iii. மனதைக் கவர்ந்தவை
- அங்கு காணப்படும் பிராணிகளின் செயற்பாடுகள்
- வனத்தின் இயற்கை அமைப்பு
- வனத்தை பராமரிக்கும் முறை போன்றன.

iv. மறக்க முடியாத அனுபவம்
- அங்கு கண்ட மிருகங்கள் பறவைகள் பற்றியது.
- அவ்வனத்தைப் பார்வை இட்டதால் கிடைத்த மகிழ்ச்சி

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

### இ. பயனுள்ள பொழுதுபோக்கு

i. அறிமுகம்
- பொழுது போக்கு என்றால் என்ன?
- பயனுள்ள வகையில் நேரத்தைப் பயன்படுத்துதல்.

ii. பல்வகையான பொழுதுபோக்குகள்
- புத்தகம் வாசித்தல், பத்திரிகை வாசித்தல்.
- வீட்டுத் தோட்டம் அமைத்தல்.
- தொலைக்காட்சிப் பார்த்தல்.
- வானொலி கேட்டல்.
- முத்திரை சேகரித்தல்.

iii. எனது பொழுதுபோக்கு
- பொழுது போக்கு பற்றி விபரித்தல்.
- காரணங்களைத் தெளிவுபடுத்தல்.
- ஒதுக்கப்படும் நேரம் பற்றி குறிப்பிடல்.

iv. பொழுதுபோக்கால் நான் பெற்ற பயன்கள்
- நேரத்தைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துதல்.
- உடலுக்கும், உள்ளத்திற்கும் மகிழ்ச்சி தருதல்.
- அறிவு பூர்வமான விடயங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- வருமானத்தைப் பெற்றுத் தருதல்.
- கலைகள் தொடர்பான பயிற்சி, ஆக்கம் பெறல்.
- சுய ஆற்றலை வளர்த்துக் கொள்ளல்.

### ஈ. மரங்களை வளர்ப்போம்

i. அறிமுகம்
- மரங்கள் மனிதனது அன்றாட தேவைகளை நிறைவு செய்கின்றன.
- இன்றைய காலகட்டத்தில் மரங்கள் அதிகமாக அழிக்கப்படுகின்றன.

ii. மரங்களின் பயன்கள்
- சீரான காலநிலையை ஏற்படுத்துகின்றன.
- நிழல், பழங்கள், மரங்களினால் கிடைக்கின்றன.
- மரங்கள் தளபாடங்கள் செய்வதற்கும், விறகிற்கும் பயன்படுகின்றன இவை போன்றவை.

iii. மரங்களை அழிப்பதால் ஏற்படும் தீமைகள்
- காலநிலை மாற்றம்
- வறட்சி
- நீர்த்தட்டுப்பாடு
- இயற்கை அழகு சீர்குலைதல்
- இவை போன்றவை

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iv. மரம் வளர்ப்பதில் எமது பங்கு
- மரங்களை நடல்
- கன்றுகளை மனிதர்களிடையே விநியோகித்தல்.
- மரம் நடும் திட்டத்தை முன்னெடுத்தல்.
- மரங்களை நடுமாறு ஊக்குவித்தல்.
- மரங்களை நடல்
- இவை போன்றவை.

**உ. வீட்டுத்தோட்டம்**

i. அறிமுகம்
- வீட்டுத்தோட்டத்தின் நோக்கம்
  அமைவிடம்
  அளவு

ii. பயிரிடப்படும் பயிர்கள்
- பயிரிடப்படும் மரக்கறி வகைகள்
- பயிரிடப்படும் பழவகைகள்
- பயிரிடப்படும் பூஞ்செடிகள்

iii. வீட்டுத்தோட்டத்தால் ஏற்படும் நன்மைகள்
- அன்றாட தேவைக்குரியவற்றைப் பெற்றுக் கொள்ளல்.
- ஆரோக்கியமான உணவுகளைப் பெற்றுக் கொள்ளல்.
- செலவினைக் குறைத்துக் கொள்ளல்.
- வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவது உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது.

iv. வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதால் ஏற்படும் மனத்திருப்தி
- மனமகிழ்ச்சி
- எமக்குத் தேவையானவற்றை நாமே செய்து கொண்ட திருப்தி

(20 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும்** இருத்தல் வேண்டும்.)
පහත දැක්වෙන රූපය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න.
(සෑම වාක්‍යයකම **වචන හතරකට නොඅඩුව** තිබිය යුතු ය.)
Write **five meaningful sentences** based on the picture given below.
(Each sentence should contain **at least four words.**)



(*10 புள்ளிகள்*)

**பகுதி II / II කොටස / Part II**

2. (படம் பார்த்து வசனம் எழுதுதல்)

(படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து எழுதுதல்)
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.)

1. உயரமான, பல பனை மரங்கள் காணப்படுகின்றன.
2. கோயில் / கோவில் ஒன்று காணப்படுகின்றது.
3. பஸ்வண்டியில் பலர் (மாணவர்கள், சிறுவர்கள், பிரயாணிகள்) பயணம் செய்கின்றனர்.
4. பேருந்தின் மேலே பயணப் பொதிகள் காணப்படுகின்றன.
5. பஸ் வண்டி கோயிலுக்கு முன்னால் செல்கின்றது.
6. பேரூந்தில் ஆண்களும், பெண்களும் பயணிக்கின்றனர்.

(இவை போன்ற படத்திற்கு பொருத்தமான வாக்கியங்களைக் கவனித்துப் புள்ளியிடுக.)

முழுமையான வாக்கியம் – 02 புள்ளி
சொல், எழுத்துப் பிழை இருப்பின் – 01 புள்ளி

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- **3, 4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு** மாத்திரம் விடை எழுதுக.
  **3** සහ **4** ප්‍රශ්නවලින් **එකකට** පමණක් පිළිතුරු ලියන්න.
  Answer only **one** question from **3** and **4**.

**3.** பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below in **complete sentences**.

விரும்பிய மா வாழை பலா
விதவிதமாய்க் கனிகள்
கரும்பிளநீர் படைத்து மனம்
களித்திடுவோம் நாங்கள்

வெண்ணிறப்பால் பொங்கி வர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்

(i) பாடலில் குறிப்பிடப்படும் கனிகள் எவை?
(ii) எதனால் எம் மனம் களிப்படையும்?
(iii) எப்போது நாம் வெடிசுடுவோம்?
(iv) பொங்கல் எது போன்றது?
(v) நாங்கள் எதற்காக இணைந்து நிற்போம்?

Department of Examinations-Sri Lanka

3.

1. இப்பாடலில் மா, வாழை, பலா ஆகிய கனிகள் குறிப்பிடப்படுகின்றன.

2. கனிகள், கரும்பிளநீர் படைப்பதனால் மனம் களிப்படையும்.

3. நாங்கள் வெண்ணிறப்பால் / பால் பொங்கி வர வெடி சுடுவோம்.

4. பொங்கல் இன்னமுதம் போன்றது.

5. நாங்கள் பொங்கலுண்ண / இன்னமுதப் பொங்கலுண்ண இணைந்து நிற்போம்.

| | | |
|---|---|---|
| முழுமையான வாக்கியம் | – | 02 புள்ளிகள் |
| முழுமையற்ற வாக்கியம் | – | 01 புள்ளி |

($2 \times 5 = 10$ புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences**.

எமது நாட்டின் பிரதான தொழில்களில் ஒன்று விவசாயமாகும். அந்நிய நாட்டவரின் வருகையால் தேயிலை, இறப்பர், கோப்பி போன்றவையும் பயிரிடப்படுகின்றன. இவற்றுள் எமது நாட்டிற்கு பெருமளவு தேசிய வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலை ஆகும். அது மட்டுமின்றி ஏலம், மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்களும் பயிரிடப்படுகின்றன. இவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலங்கை மக்களின் பிரதான உணவு சோறாகும்.

(i) இலங்கை மக்களின் பிரதான தொழில் எது?
(ii) இறப்பர் பயிர்ச்செய்கை யாரால் அறிமுகம் செய்யப்பட்டது?
(iii) இலங்கைக்கு பெருமளவு தேசிய வருமானத்தை ஈட்டித் தரும் பயிர் யாது?
(iv) இலங்கை மக்களின் பிரதான உணவு யாது?
(v) வாசனைத் திரவியங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

Department of Examinations-Sri Lanka

4. 1. இலங்கை மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

2. இறப்பர் பயிர்ச்செய்கை அந்நிய நாட்டவரால் அறிமுகம் செய்யப்பட்டது.

3. தேசிய வருமானத்தை ஈட்டித்தரும் பயிர் தேயிலை ஆகும்.

4. இலங்கை மக்களின் பிரதான உணவு சோறாகும்.

5. ஏலம், மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் என்பன வாசனைத் திரவியங்களாகும். (ஏதாவது இரண்டு)

முழுமையான வாக்கியம் - 02 புள்ளிகள்
முழுமையற்ற வாக்கியம் - 01 புள்ளி

($2 \times 5 = 10$ புள்ளிகள்)


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி III / III කොටස / Part III

- **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
  **5** සහ **6** ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
  Write answers to the questions **5** and **6**.

**5.** இரண்டாம் மொழிக் கற்கையின் முக்கியத்துவம் பற்றி உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
දෙවන බස ඉගෙනීමේ වැදගත්කම පිළිබඳව ඔබගේ මිතුරාට යවන ලිපියක් ලියන්න.
Write a letter to your friend regarding the importance of learning the second language.

**அல்லது / නැතහොත් / Or**

கொவிட்-19 நோயை இல்லாதொழித்தல் தொடர்பாக பாடசாலையை மையப்படுத்தி சுவரொட்டி ஒன்று தயாரிக்குக.
පාසල් පරිශ්‍රය තුළ කොවිඩ්-19 මර්දනය පිළිබඳව පෝස්ටරයක් නිර්මාණය කරන්න.
Draw a poster on alleviating Covid-19 in the school premises.

*(10 புள்ளிகள்)*

Department of Examinations-Sri Lanka

5. **அமைப்பு**

| | | |
|---|---|---|
| முகவரி | – | 01 புள்ளி |
| விளிப்பு | – | 01 புள்ளி |
| முடிப்பும், ஒப்பமும் | – | 01 புள்ளி |

**உள்ளடக்கம்**

- நலம் விசாரித்தல்.
- இரண்டாம் மொழி பற்றி விளக்கம் அளித்தல்.
- தொடர்பாடல் அதிகரித்தல்.
- இன நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்படல்.
- தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கான சந்தர்ப்பம் அதிகரித்தல்.
- ஏனைய மொழி பற்றிய அறிவும், பண்பாட்டு வளர்ச்சியும் ஏற்படல்.

**மொழிநடை**

- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | |
|---|---|---|
| அமைப்பு | – | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | – | 05 புள்ளிகள் |
| மொழிநடை | – | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)

அல்லது


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**சுவரொட்டி**

**அமைப்பு**
- மாணவர்களை கவரும் வகையில் அமைதல் – தலைப்பு
- கொவிட் – 19 நோயை இல்லாதொழிப்போம்! உயிர் காப்போம்!
  (இது போன்ற தலைப்புகள் இடம் பெறலாம்)

**விளிப்பு**
- கொவிட் – 19 நோய் பயங்கரமானது உயிரைக் கொல்லும்.
- கொவிட் – 19 நோயிலிருந்து எங்கள் மாணவர்களைக் காப்போம்.

**உள்ளடக்கம்**
- காப்பது எப்படி?
- முகக்கவசங்களைப் பாதுகாப்பான முறையில் அணிதல்.
- கிருமி நீக்கிகளைப் பயன்படுத்தி கைகளைச் சுத்தமாகக் கழுவுதல்.
- சமூக இடைவெளிகளைப் பேணுதல்.
- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் உணவு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
  (இவை போன்றவற்றை எழுதுதல்.)

**முடிப்பு**
- பொருத்தமான நிறுவனங்களைக் குறிப்பிடுக.
  உதாரணம் : சுகாதார அமைச்சு

**மொழிநடை**
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை
- எளிமை

| | | | |
|---|---|---|---|
| அமைப்பு | – | 03 புள்ளிகள் | |
| உள்ளடக்கம் | – | 05 புள்ளிள் | |
| மொழிநடை | – | 02 புள்ளிகள் | (10 புள்ளிகள்) |

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களை **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය **දෙමළ** භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil**.

| | | | |
|---|---|---|---|
| (i) | මට මේ පොත අවශ්‍යයයි. | (i) | I need this book. |
| (ii) | කොහොමද ඒක සිදුවුණේ? | (ii) | How did it happen? |
| (iii) | මම මගේ මව සමග කඩයට ගියෙමි. | (iii) | I went to the shop with my mother. |
| (iv) | සබන් යොදා ඔබේ දෑත් සෝදන්න. | (iv) | Wash your hands using soap. |
| (v) | මම රෝහලක සේවය කරමින් සිටිමි. | (v) | I am working in a hospital |

**அல்லது / නැතහොත් / Or**

இலங்கையின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பாக உங்களுக்கும் உங்கள் நண்பனுக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல் ஒன்றை **50** சொற்களில் எழுதுக.
ශ්‍රී ලංකාවේ රූපවාහිනී වැඩසටහන් සම්බන්ධව ඔබ හා ඔබගේ මිතුරා අතර ඇතිවන දෙබසක් වචන **50**කින් පමණ ලියන්න.
Write a dialogue between you and your friend on TV programs of Sri Lanka using about **50** words.

*(10 புள்ளிகள்)*

1. எனக்கு இந்த புத்தகம் தேவை / அவசியம் / வேண்டும்.

   இந்த புத்தகம் எனக்குத் தேவை / அவசியம் / வேண்டும்.
2. அது எப்படி / எவ்வாறு நடந்தது?
3. நான் எனது / என்னுடைய அம்மாவுடன் / அம்மாவோடு கடைக்கு சென்றேன் / போனேன்.
4. சவர்க்காரம் போட்டு / இட்டு உங்கள் இரு கைகளையும் கழுவுங்கள்.
5. நான் வைத்தியசாலையில் சேவை / வேலை செய்கின்றேன்.

(2 x 5 =10 புள்ளிகள்)

முழுமையான வாக்கியமாயின் - 02 புள்ளி
வழுக்கமுள்ள வாக்கியமாயின் - 01 புள்ளி

**அல்லது**

**உரையாடல்**

**அமைப்பு**
- உரையாடற் பாங்கில் எழுதுதல்.

**உள்ளடக்கம்**
- தலைப்புக்கு பொருத்தமானதாக இருத்தல்.
- 5 சோடிகள்

**மொழிநடை**
- பேச்சு மொழி
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 03 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 05 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

(10 புள்ளிகள்)

Department of Examinations-Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/